சிறப்பு மாவட்ட நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை,
முன்னிலை திருமதி. எஸ். ரோகினி, பி.எல்.,
சிறப்பு மாவட்ட நீதிபதி, மதுரை,
2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ம் நாள் வியாழக்கிழமை
எம்.சி.ஓ.பி.எண்.1202/2023
CNR No.TNMD0D-000898-2023

1. மதுரை–16, பொன்மேனி, சம்மட்டிபுரம், பாண்டிகோவில் 3வது தெரு, எண்.90 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். ஜெகதீஸ்வரன் அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 42 உள்ள லலிதாகுமாரி
2. மதுரை–16, பொன்மேனி, சம்மட்டிபுரம், பாண்டிகோவில் 3வது தெரு, எண்.90 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். ஜெகதீஸ்வரன் அவர்களின் மகன் இந்து வயது சுமார் 20 உள்ள அரவிந்த்பாண்டியன்
3. மதுரை–16, பொன்மேனி, சம்மட்டிபுரம், பாண்டிகோவில் 3வது தெரு, எண்.90 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். ஜெகதீஸ்வரன் அவர்களின் மகள் இந்து வயது சுமார் 19 உள்ள நிவேதா
4. மதுரை–16, பொன்மேனி, சம்மட்டிபுரம், பாண்டிகோவில் 3வது தெரு, எண்.90 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். துளசிராமன் அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 63 உள்ள சகுந்தலா

... மனுதாரர்கள்

/எதிராக/

1. மதுரை–16, சம்மட்டிபுரம், ராஜன் தெரு, சொக்கலிங்கநகர் என்ற விலாசத்தில் வசிக்கும் காமாட்சி அவர்களின் குமாரர் சுப்பிரமணி
2. மதுரை–16, தேனிமெயின்ரோடு, புதிய எண்.27, பி.கே.எண்.ரெசிடென்சி, 1வது தளம், எண்.218ஏ என்ற விலாசத்தில் இயங்கிவரும் MAGMA HDI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் கிளை மேலாளர் மூலமாக

... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 10.02.2025 அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.B.ராஜ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த

வழக்குரைஞர் திரு. S. சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றம் அழைத்தும் ஆஜரிண்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டநிலையலும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>உத்தரவு</u>

இறந்துபோன ஜெகதீஸ்வரன் என்பவருக்கு ஏற்பட்ட சாலை விபத்து காயத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் **164–ன்படியும், திருந்திய சட்டம் 32/2019–ன்படியும், 166–ன்படியும்** உடனிணைந்த விதி **3(1)–ன்படியும்,** கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2. மனுவின் சுருக்கம் :</u>

கடந்த 28.03.2023ம் தேதியன்று மதியம் சுமார் 2.15 மணியளவில் ஜெகதீஸ்வரன் அவர்கள் தனக்குச் சொந்தமான இருசக்கர வாகன எண்.TN-58-BE-1432 சுசுகி அக்சஸ் இருசக்கர வாகனத்தை காளவாசல் சிக்னல் அருகே தங்கம் கிரான்ட் ஹோட்டலிலிருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காளவாசல் சர்வீஸ் ரோட்டில் ரியல் பழமுதிர்சோலை முன்பு தள்ளிக்கொண்டு செல்லும்போது அதே ரோட்டில் எதிரே 1ம் எதிர்மனுதாரர் வாகன எண்.TN58-BH-1561 பஜாஜ் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரர் எதிர்திசையில் மேற்படி வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை முறையாக கடைபிடிக்காமலும், ஹாரன் அடிக்காமலும் ஜெகதீஸ்வரன் தள்ளிக்கொண்டு சென்ற இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார். அதனால் ஜெகதீஸ்வரன் என்பவருக்கு தலை மற்றும் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. உடனடியாக ஜெகதீஸ்வரன் மதுரை அரசு

இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டுசென்று சிகிச்சைக்கு பின் அப்பல்லோ மருத்துவமனையில் 28.03.2023ம் தேதி ஜெகதீஸ்வரன் சிகிச்சை பலனின்றி 2.5.2023ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையுமே காரணம் ஆகும்.

மனுதாரர் ரூ.1,00,00,000/- இழப்பீடு கேட்டு இம்மனுவினை தாக்கல்செய்துள்ளார்.

3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்-

மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் இந்த எதிர் மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஒருவழிப் பாதையான சர்வீஸ் சாலையின் சரியான பக்கத்தில், மெதுவான வேகத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு, முறையாக ஹார்ன் அடித்து, தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருந்தார். சந்திப்பில் உள்ள இலவச இடதுபுறத் திருப்பத்தை நெருங்கும் போது, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வேகத்தை மேலும் குறைத்து, சாலையில் கவனமாகச் சென்று கொண்டிருந்தார். இறந்தவர் சாலையில் இரு சக்கர வாகனத்துடன் நடந்து சென்றதாக கூறப்படுவது தவறானதாகும். அதிவேகமாக இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவர், ஒருவழிப் பாதையாக இருந்தபோதும், சர்வீஸ் சாலையின் தவறான பக்கத்தில் வந்து, முதலாம் பிரதிவாதியின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். மேலும், இறந்தவர் கட்டாயம் தலைக்கவசம் அணியாமல் அலட்சியமாக இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றதாகக் கூறப்படுகிறது. மனுவின் 23வது

நெடுவரிசையின் பத்தி 3ல் உள்ள குறைகள் குறித்து மனுதாரர்கள் கடுமையான ஆதாரங்களை முன்வைக்கின்றனர். 1ம் எதிர்மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், இறந்தவர் மீது மட்டும் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகை குறைக்கப்பட்டதால், குற்றப்பத்திரிகை முடித்து வைக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் அலட்சியத்தால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்பதை மேற்கண்ட உண்மைகள் தெளிவாகக் காட்டுகின்றன. விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பேற்கவில்லை என்பதால், மனுதாரர்களுக்கு எந்த விதத்திலும் எந்த எதிர்மனுதாரர்களும் எந்த விதத்திலும் இழப்பீடு வழங்க முடியாது என்று சமர்ப்பிக்கப்படுகிறது. மனுதாரர் இழப்பீடு பெறுவதற்காக மனுதாரர் பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு கோரியுள்ளார். இறந்துபோனவரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் திறன் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) இந்த வழக்கில் தீர்மானிக்கவேண்டியவை:

1) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று இறந்துபோன ஜெகதீஸ்வரன் தள்ளிக்கொண்டு சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினாரா?

2) மனுதாரருக்கு யாரால் இழப்பீடு வழங்க வேண்டும்? மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 முதல் ம.சா.4 வரையான

சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.20 மற்றும் சா.சா.ஆ.1 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர், சான்றாவணங்களாக சா.சா.ஆ.2, சா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) பிரச்சனை 1–

கடந்த 28.03.2023ம் தேதியன்று மதியம் சுமார் 2.15 மணியளவில் ஜெகதீஸ்வரன் அவர்கள் தனக்குச் சொந்தமான இருசக்கர வாகன எண்.TN-58-BE-1432 சுசுகி அக்சஸ் இருசக்கர வாகனத்தை வாகனத்தை காளவாசல் சிக்னல் அருகே தங்கம் கிராண்ட் ஹோட்டலிலிருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காளவாசல் சர்வீஸ் ரோட்டில் ரியல் பழமுதிர்சோலை முன்பு தள்ளிக்கொண்டு செல்லும்போது அதே ரோட்டில் எதிரே 1ம் எதிர்மனுதாரர் வாகன எண்.TN58-BH-1561 பஜாஜ் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரர் எதிர்திசையில் மேற்படி வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை முறையாக கடைபிடிக்காமலும், ஹாரன் அடிக்காமலும் ஜெகதீஸ்வரன் தள்ளிக்கொண்டு சென்ற இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டதாகவும், அதனால் ஜெகதீஸ்வரன் என்பவருக்கு தலை மற்றும் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், உடனடியாக ஜெகதீஸ்வரன் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டுசென்று சிகிச்சைக்கு பின் அப்பல்லோ மருத்துவமனையில் 28.03.2023ம் தேதி ஜெகதீஸ்வரன் சிகிச்சை பலனின்றி 2.5.2023ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

6) ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை ஆகும். மேற்படி முதல்

தகவல் அறிக்கை 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் இறந்துபோன ஜெகதீசன் என்பவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது.

7) ம.சா.2ஐ 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொழுது விபத்து மதியம் 2.15 மணியளவில் நடந்தது. விபத்து நடந்த இடத்திற்கு நான் என்னுடைய பான்கார்டு மற்றும் ஆதார் கார்டை ஜெராக்ஸ் எடுப்பதற்காக சென்றேன். எனது வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தொலைவில் சுமாராக 10, 15 ஜெராக்ஸ் கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது மதுரை பைப்பாஸ் ரோடு மேம்பாலத்திற்கு கீழே காளவாசல் ஜங்ஷன் அருகே நடந்தது. விபத்து நடந்தது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரக்கூடிய சாலையின் கிழக்கு பகுதியில் என்றால் சரிதான். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்கள் காளவாசல் சிக்னலில் நிற்காமல் அரசரடி நோக்கி செல்வதற்கு தனியாக தடுப்புச்சுவர் வைத்து ரோட்டின் கிழக்கு ஓரத்தில் அமைக்கப்பட்ட பாதையில் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் விபத்தில் இறந்த நபர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். அந்த இடம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்கள் வருவதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட பகுதி என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களின் பதிவு எண்ணை என்னுடைய ஞாபகத்தில் வைத்திருந்தால் கூறியுள்ளேன். பிளாட்டினா இருசக்கர வாகனத்தை 50 அடி துரத்தில் வரும்போது பார்த்தேன். அந்த வாகனம் ரோட்டின் கிழக்கு ஓரமாக வந்து கொண்டிருந்தது. விபத்தில் இறந்தவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் இல்லை என்பதால் வாகனத்தை உருட்டிக்கொண்டு வந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 தன்னுடைய குறுக்கு விசாரணையின்போது காயமடைந்தவரை விசாரித்தோம் ஆனால் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், இந்த வழக்கில் தான் புலன் விசாரணை அதிகாரி கிடையாது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

9) விபத்தானது 28.3.2023 அன்று நடைபெற்றுள்ளது. அவர் 2.5.2023 அன்று இறந்துள்ளார். காவல்துறையினர் விபத்தில் காயம்பட்ட ஜெகதீசனை விசாரித்த போதும், புகார் வாக்குமூலம் ஏன் வாங்கவில்லை என்பதற்கு காரணங்கள் எதுவும் கூறவில்லை. மேலும் சாட்சி சான்றாவணம் 1 குற்ற இறுதி அறிக்கை சாட்சி பட்டியல் மற்றும் வாக்குமூலங்கள் இணைக்கப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் குறித்து காவல்துறையில் புகார் கொடுத்த 1ம் எதிர்மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் 1ம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டும், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி விபத்து குறித்து அவருடைய ஆட்சேபணை எதுவும் செய்யாமல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். எனவே மேற்கண்டவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது 1ம் எதிர்மனுதாரர் விபத்தில் இருந்து தன்னை தற்காத்துக்கொள்ளும்பொருட்டு, விபத்து நடந்து ஆறு மணி நேரம் கழித்து காவல்நிலையத்தில் இறந்துபோன ஜெகதீசன் என்பவர் மீது புகார் கொடுத்துள்ளார்என்பது தெரியவருகறிது. மேற்படி புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையவில்லை என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

10) ம.சா.2ன் சாட்சியத்தில் இருந்து ம.சா.2 சம்பவ சாட்சியாவார். ம.சா.2 அவருடைய சாட்சியத்தில் இருசக்கர வாகனத்தை

உருட்டிக்கொண்டு சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வரும் சாலையில் வரும்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த 1ம் எதிர்மனுதாரர் அவருடைய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து மோதிவிட்டார் என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் இறந்துபோன ஜெகதீசன் இருசக்கர வாகனத்தை உருட்டிக்கொண்டு வரும்போது அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது.

11) மேலும் ம.சா.2ன் சாட்சியத்தில் இருந்து இறந்துபோன ஜெகதீசன் தவறான பாதையில் இருசக்கர வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உருட்டிக்கொண்டு வந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்பதும் தெளிவாகிறது. எனவே விபத்திற்கு இறந்துபோன ஜெகதீசனும் மற்றும் 1ம் எதிர்மனுதாரரும் காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே இறந்துபோன ஜெகதீசனின் கவனக்குறைவின் பங்களிப்பு 30 சதவீதம் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவின் பங்களிப்பு 70 சதவீதம் என்றும் முடிவு செய்து பிரச்சனை எண் 1க்கு தீர்வு காணப்படுகிறது.

12. **<u>பிரச்சனை–2</u>**

பிரச்சனை எண்.1ல் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவின் பங்களிப்பு 70சதவீதம் என்றும், இறந்தவரின் கவனக்குறைவின் பங்களிப்பு 30 சதவீதம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் கவனக்குறைவின் பங்களிப்பிற்கான 30 சதவீத இழப்பீட்டுத் தொகையை மனுதாரர்கள் பெறத்தக்கவர்கள் இல்லை. விபத்தில் ஈடுபட்ட 1ம் எதிர்மனுதாரரின் வாகனம், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில்

காப்பீடு செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் உள்ளது என்பது 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் விபத்தில் ஈடுபட்ட வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரருக்காக 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு, 70 சதவீத இழப்பீட்டுத்தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றும் பிரச்சினை எண்.2க்கு தீர்வு காணப்படுகிறது.

13. <u>பிரச்சனை எண்.3</u>

ம.சா.ஆ.5–ன்படி இறந்துபோன ஜெகதீசன் என்பவருக்கு 1 முதல் 4 மனுதாரர்கள் வாரிசுதாரர்கள் என்பது தெரியவருகிறது. எனவே இறந்தவரின் இழப்பீடு பெற 1 முதல் 4 மனுதாரர்கள் உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

14. இறந்து போனவரின் வயது 46 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன ஜெகதீஸ்வரன் என்பவரின் வயதைக்காட்டக்கூடிய ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.9 இறந்தவரின் ஓட்டுநர் உரிமம் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் இறந்தவரின் பிறந்த தேதி 07.04.1978 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இறந்தவரின் வயது 45 என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

15. விபத்து சமயம் இறந்துபோன ஜெகதீஸ்வரன் என்பவர் விபத்து சமயத்தில் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா, மதுரை கரிமேடு கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருடம் ரூ,1073654/– சம்பாதித்து வந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்க மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.11 ஆவணத்தின்படி சம்பளச்சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு சான்றாவணம் 7–ன்படி

சம்பளச்சான்றிதழில் வருட வருமானம் ரூ.1157240ல் வருமானவரி பிடித்தம் ரூ.83586/-ஐ கழித்தது போக ரூ.1073654 /- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இத்தீர்ப்பாயம் ம.சா.ஆ.7ன்படி மனுதாரரின் வருட வருமானம் ரூ.1073654/- என்று நிர்ணயம் செய்கிறது.

16. இறந்துபோனவரின் வயது 45 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2) TNMAC 609(SC)- **மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு முடிவின்படி** இறந்தவர் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா, மதுரை கரிமேடு கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வந்ததால் மேற்படி தொகையில் 30% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.**1073654 **+ 322096= ரூ.1395750/-என்று** எதிர்கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

17. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors. v. Delhi Transport Corporation and Another - 2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ளபடி இறந்துபோனவருக்கு பெருக்கல் குறியீடு **14** என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்துபோனவரைச் சார்ந்து நான்கு நபர்கள் இருப்பதால் இறந்துபோன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை **ரூ.1395750**/- லிருந்து 1/4 சதவீதம் பங்கான ரூ348937/- கழித்தது போக இறந்து போன நபரைச் சார்ந்தவர்களுக்கான இழப்பீடு ( **ரூ. .1395750 -** ரூ.348937/- =1046813/-) ரூ.1046813/- x14 = ரூ.1,46,55,382/- எனக் கணக்கிடப்படுகிறது.

18. 1ம் மனுதாரர் தமது இல்வாழ்க்கையை இழந்தமைக்காகவும், 2, 3 மனுதாரர்கள் தமது தகப்பனாரை இழந்தமைக்காகவும், 4ம் மனுதாரர் தமது மகனை இழந்தமைக்காகவும் மேலே கண்ட உச்ச நீதிமன்ற

தீர்ப்பின்படி தலா ரூ.40,000/– இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்றும், காயம்பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்ற வகையில் மனுதாரர்களுக்கு ரூ.5,000/– கிடைக்கத்தக்கது. ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/– மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் Loss of estate ஆக ரூ.15,000/– மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் ம.சா.ஆ.8ல் கண்டுள்ள தொகையை நான் வங்கி மூலம் வாங்கிக்கொண்டோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே ம.சா.ஆ.8ல் கண்டுள்ள தொகை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதில்லை என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

19. ஏற்கனவே விபத்து ஏற்பட இறந்தவரின் கவனக்குறைவின் பங்களிப்பு **30** சதவீதம் என்றும்**, 1**ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவின் பங்களிப்பு **70** சதவீதம் என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை **2**க்குதீர்வுகாணப்பட்டுள்ளதால் மொத்த இழப்பீட்டுத்தொகை**ரூ.14286700 – (ரூ.14286700/– – 4455115 =** ரூ.**10395267)–**ல் **30** சதவீதம் கழித்தது போக மீதம் **ரூ.10395267/– 2**ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு வழங்கவேண்டுமென்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

20. 1 முதல் 3 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதை தவிர மனுதாரர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதார்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 1 முதல் 4 மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூ. **10395267 /–** ஐ 2ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும். மேற்படி தொகைக்கு மனு தாக்கலான

தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவுத்தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் E-Transfer மூலம் இந்நீதிமன்ற (in **Indian Bank, A/c Name: MACT Special District Judge, Madurai A/c No.VMSDJKMCOP12022023, IFSC Code: IDIB000K215**.). என்ற கணக்கில் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மனு தாக்கலான நாள் 05.07.2023

3. மேற்படி மொத்த இழப்பீட்டுத் தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ4095267/- மும் கிடைக்கத்தக்கது என்றும். 2, 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.30,00,000/-மும் கிடைக்கத்தக்கது என்றும், 4ம் மனுதாரருக்கு ரூ.3,00,000/-மும் மேற்படி 1 முதல் 3 மனுதாரர்கள் தமக்குரிய தொகையில் 50 சதவீதமும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையையும் உடனடியாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், 1 முதல் 3 மனுதாரர்களுக்குரிய மீதமுள்ள தொகையை அவர்களது பெயரில் மூன்று வருடகாலத்திற்கு அதே வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. 4ம் மனுதாரர் தமக்குரிய இழப்பீட்டுத்தொகையையும், அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

**4. மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக ரூ.103326/- செலுத்தவேண்டும் மனுதாரர் ஏற்கனவே ரூ.100/- செலுத்தியது போக மீதம் நீதிமன்ற கடட்டணம் ரூ.103226/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**5.** வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**112453/–** நிர்ணயம் செய்யப்படுகிறது.

**6**. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2021 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and othersல் 11/5/2021 அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2025** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் **20**ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SANKARANARAYANAN ROHINI
Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2025.02.20 12:56:31 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.**1** – லலிதா குமாரி
ம.சா.2 – கார்த்திகேயன்
ம.சா.3 – பானுபிரியதர்ஷினி
ம.சா.4 –தர்மராஜா

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.**1** – விபத்து முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்
ம.சா.ஆ.**2** – **1**ம் எதிர்மனுதாரர் சுப்பிரமணி பேரில் கொடுத்த ஆன்லைன் புகார் ரசீது கணினி வழி பதிவிறக்க காப்பி

ம.சா.ஆ.3 – உடல்கூராய்வு அறிக்கை சான்றிட்ட நகல்
ம.சா.ஆ.4 – இறப்பு சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.5 – வாரிசு சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.6 –இறந்த நபரின் வேலை அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.7 –இறந்த நபரின் மார்ச், ஏப்ரல் 2023 சம்பளச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.8 –மருத்துவ பில்கள் அசல்
ம.சா.ஆ.9 –இறந்த நபரின் ஓட்டுநர் உரிமம் நகல்
ம.சா.ஆ.10 –1ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.11 –1ம் மனுதாரர் வங்கி பாஸ் புக் நகல்
ம.சா.ஆ.12 – 2ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.13- 2ம் மனுதாரரின் வங்கி பாஸ் புக் நகல்
ம.சா.ஆ.14-3ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.15-3ம் மனுதாரர் வங்கி பாஸ் புக் நகல்
ம.சா.ஆ.16-4ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.17-4ம் மனுதாரர் வங்கி பாஸ் புக் நகல்
ம.சா.ஆ.18-ம.சா.2ன் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.19-சிகிச்சை கோப்பு
ம.சா.ஆ.20-மருத்துவபில்கள்
சா.சா.ஆ.1- சம்பள ரசீது

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> –
எ.ம.சா.1 – பொன்முனியாண்டி
எ.ம.சா.2 –சௌந்தரபாண்டியன்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்–</u>

சா.சா.ஆ.1 – இறுதி அறிக்கை நகல்
சா.சா.ஆ.2 – மாதிரி வரைபட நகல்

SANKARANARAYANAN ROHINI
Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2025.02.20 12:56:38 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

**சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,**
**மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,**
**மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்**
**கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.**

எம்.சி.ஒ.பி எண்.1202/2023
வரைவு / செவ்வை உத்தரவு
நாள் 20.02.2025